ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

# ஆழ்வார் ஆசாரியர்களின் வாழித்திருநாமங்கள்

## (தென்கலை ஸம்ப்ரதாயம்)

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே வரவரமுநயே நம:

# ஆழ்வார் ஆசாரியர்களின் வாழித்திருநாமங்கள்

(தென்கலை ஸம்ப்ரதாயம்)

## பெரிய பெருமாள்

திருமகளும் மண்மகளும் சிறக்கவந்தோன் வாழியே
செய்யவிடைத் தாய்மகளார் சேவிப்போன் வாழியே
இரு விசும்பில் வீற்றிருக்கும் இமையவர் கோன் வாழியே
இடர்கடியப் பாற்கடலை எய்தினான் வாழியே
அரிய தயரதன் மகனாய் அவதரித்தான் வாழியே
அந்தரியாமித்துவமும் ஆயினான் வாழியே
பெருகி வரும் பொன்னி நடுப் பின் துயின்றான் வாழியே
பெரிய பெருமாள் எங்கள் பிரான் அடிகள் வாழியே

## பெரிய பிராட்டியார்

பங்கயப் பூவிற் பிறந்த பாவை நல்லாள் வாழியே
பங்குனியில் உத்திரநாள் பார் உதித்தாள் வாழியே
மங்கையர்கள் திலதமென வந்த செல்வி வாழியே
மால் அரங்கர் மணிமார்பை மன்னும் அவள் வாழியே
எங்கள் எழிற் சேனைமன்னர்க்கிதமுரைத்தாள் வாழியே
இருபத்தஞ்சுட்பொருள் மால் இயம்பும் அவள் வாழியே
செங்கமலச் செய் அரங்கம் செழிக்க வந்தாள் வாழியே
சீரங்கநாயகியார் திருவடிகள் வாழியே

## ஆண்டாள்

திருவாடிப்பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயர் அரங்கற்கே கண்ணி யுகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே
வண் புதுவை நகர்க்கோதை மலர்ப் பதங்கள் வாழியே

கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழும் ஊர்
சோதி மணிமாடந் தோன்றும் ஊர் - நீதியால்
நல்ல பத்தர் வாழும் ஊர் நான்மறைகள் ஓதும் ஊர்
வில்லி புத்தூர் வேதக்கோனூர்
பாதகங்கள் தீர்க்கும் பரமன் அடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு

## சேனை முதலியார்

ஓங்கு துலாப் பூராடத்துதித்த செல்வன் வாழியே
ஒண்டொடியாள் சூத்திரவதி உறைமார்பன் வாழியே
ஈங்குலகில் சடகோபற்கிதம் உரைத்தான் வாழியே
எழிற்பிரம்பின் செங்கோலை ஏந்துமவன் வாழியே
பாங்குடன் முப்பத்துமூவர் பணியுமவன் வாழியே
பங்கயத்தாள் திருவடியைப் பற்றினான் வாழியே

தேங்கு புகழ் அரங்கரையே சிந்தை செய்வோன் வாழியே
சேனையர் கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே

### நம்மாழ்வார்

திருக்குருகைப் பெருமாள் தன் திருத்தாள்கள் வாழியே
திருவான திருமுகத்துச் செவி என்றும் வாழியே
இருக்குமொழி என்னெஞ்சில் தேக்கினான் வாழியே
எந்தை எதிராசர்க்கிறைவனார் வாழியே
கருக்குழியில் புகாவண்ணம் காத்தருள்வோன் வாழியே
காசினியில் ஆரியனாய் (ஆரியனை)க் காட்டினான் வாழியே
வருத்தமற வந்தென்னை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி தம் பிரான் வாழி வாழி வாழியே

ஆன திருவிருத்தம் நூறும் அருளினான் வாழியே
ஆசிரியம் ஏழு பாட்டளித்த பிரான் வாழியே
ஈனமற அந்தாதி எண்பத்தேழீந்தான் வாழியே
இலகு திருவாய்மொழி ஆயிரத்தொரு நூற்றிரண்டுரைத்தான் வாழியே
வானணியும் மாமாடக் குருகை மன்னன் வாழியே
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே
சேனையர் கோன் அவதாரஞ் செய்த வள்ளல் வாழியே
திருக்குருகைச் சடகோபன் திருவடிகள் வாழியே

மேதினியில் வைகாசி விசாகத்தோன் வாழியே
வேதத்தைச் செந்தமிழால் விரித்துரைத்தான் வாழியே
ஆதி குருவாய்ப் புவியில் அவதரித்தான் வாழியே
அனவரதஞ் சேனையர் கோன் அடி தொழுவோன் வாழியே
நாதனுக்கு நாலாயிரம் உரைத்தான் வாழியே
நன் மதுரகவி வணங்கும் நாவீறன் வாழியே

மாதவன் பொற்பாதுகையாய் வளர்ந்தருள்வோன் வாழியே
    மகிழ் மாறன் சடகோபன் வையகத்தில் வாழியே

## பொய்கையாழ்வார்

செய்ய துலா ஓணத்திற் செகத்துதித்தான் வாழியே
    திருக்கச்சி மாநகரஞ்செழிக்கவந்தோன் வாழியே
வையந் தகளி நூறும் வகுத்துரைத்தான் வாழியே
    வநசமலர்க் கருவதனில் வந்தமைந்தான் வாழியே
வெய்ய கதிரோன் தன்னை விளக்கிட்டான் வாழியே
    வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே
பொய்கை முனி வடிவழகும் பொற்பதமும் வாழியே
    பொன் முடியும் திருமுகமும் பூதலத்தில் வாழியே

## பூதத்தாழ்வார்

அன்பே தகளி நூறும் அருளினான் வாழியே
    ஐப்பசியில் அவிட்டத்தில் அவதரித்தான் வாழியே
நன் புகழ் சேர் குருக்கத்தி நாண் மலரோன் வாழியே
    நல்ல திருக் கடன்மல்லை நாதனார் வாழியே
இன்புருகு சிந்தைதிரி இட்ட பிரான் வாழியே
    எழில்ஞானச் சுடர் விளக்கை ஏற்றினான் வாழியே
பொன் புரையும் திருவரங்கர் புகழ் உரைப்போன் வாழியே
    பூதத்தார் தாள் இணை இப்பூதலத்தில் வாழியே

## பேயாழ்வார்

திருக்கண்டேன் என நூறுஞ்செப்பினான் வாழியே
    சிறந்த ஐப்பசிற் சதயம் செனித்த வள்ளல் வாழியே

மருக் கமழும் மயிலை நகர் வாழவந்தோன் வாழியே
மலர்க்கரிய நெய்தல் தனில் வந்துதித்தான் வாழியே
நெருக்கிடவே இடைகழியில் நின்ற செல்வன் வாழியே
நேமி சங்கன் வடிவழகை நெஞ்சில் வைப்போன் வாழியே
பெருக்கமுடன் திருமழிசைப்பிரான் தொழுவோன் வாழியே
பேயாழ்வார் தாளிணை இப்பெரு நிலத்தில் வாழியே

## திருமழிசைப்பிரான்

அன்புடன் அந்தாதி தொண்ணூற்றாறுரைத்தான் வாழியே
அழகாரும் திருமழிசை அமர்ந்த செல்வன் வாழியே
இன்பமிகு தையில் மகத்திங்குதித்தான் வாழியே
எழில் சந்தவிருத்தம் நூற்றிருபதீந்தான் வாழியே
முன்புகத்தில் வந்துதித்த முனிவனார் வாழியே
முழுப் பெருக்கில் பொன்னி எதிர் மிதந்த சொல்லோன் வாழியே
நன் புவியில் நாலாயிரத்தெழு நூற்றான் வாழியே
நங்கள் பத்தி சாரர் இரு நற்பதங்கள் வாழியே

## குலசேகரப் பெருமாள்

அஞ்சனமா மலைப் பிறவி ஆதரித்தோன் வாழியே
அணி அரங்கர் மணத்தூணை அடைந்துய்ந்தோன் வாழியே
வஞ்சி நகரம் தன்னில் வாழவந்தோன் வாழியே
மாசி தன்னிற் புனர்பூசம் வந்துதித்தான் வாழியே
அஞ்சல் எனக் குடப்பாம்பில் அங்கை இட்டான் வாழியே
அநவரதம் இராம கதை அருளும் அவன் வாழியே
செஞ்சொல் மொழி நூற்றஞ்சுஞ்செப்பினான் வாழியே
சேரலர் கோன் செங்கமலத் திருவடிகள் வாழியே

## பெரியாழ்வார்

நல்ல திருப்பல்லாண்டு நான்மூன்றோன் வாழியே
நானூற்றறுபத்தொன்றும் நமக்குரைத்தான் வாழியே
சொல் அரிய வானிதனில் சோதி வந்தான் வாழியே
தொடை சூடிக்கொடுத்தாளைத் தொழுந்தமப்பன் வாழியே
செல்வநம்பி தன்னைப் போல் சிறப்புற்றான் வாழியே
சென்று கிழி அறுத்து மால் தெய்வம் என்றான் வாழியே
வில்லிபுத்தூர் நகரத்தை விளக்கிட்டான் வாழியே
வேதியர் கோன் பட்டர் பிரான் மேதினியில் வாழியே

## தொண்டரடிப்பொடியாழ்வார்

மண்டங்குடி அதனை வாழ்வித்தான் வாழியே
மார்கழியில் கேட்டை தனில் வந்துதித்தான் வாழியே
தெண்டிரை சூழ் அரங்கரையே தெய்வம் என்றான் வாழியே
திருமாலை ஒன்பதஞ்சுஞ்செப்பினான் வாழியே
பண்டு திருப்பள்ளியெழுச்சி பத்துரைத்தான் வாழியே
பாவையர்கள் கலவிதனைப் பழித்த செல்வன் வாழியே
தொண்டு செய்து துளபத்தால் துலங்கினான் வாழியே
தொண்டரடிப்பொடி ஆழ்வார் துணைப் பதங்கள் வாழியே

## திருப்பாணாழ்வார்

உம்பர் தொழும் மெய்ஞ்ஞானத்துறை ஊரான் வாழியே
உரோகிணி நாள் கார்த்திகையில் உதித்த வள்ளல் வாழியே
வம்பவிழ்தார் முனி தோளில் வந்த பிரான் வாழியே
மலர்க் கண்ணில் வேறொன்றும் வையா தான் வாழியே
அம்புவியில் மதிள் அரங்கர் அகம் புகுந்தான் வாழியே
அமலன் ஆதி பிரான் பத்தும் அருளினான் வாழியே

செம் பொன் அடி முடி அளவும் சேவிப்போன் வாழியே
திருப்பாணன் பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே

## திருமங்கையாழ்வார்

ஐயன் அருள்மாரி செய்ய அடி இணைகள் வாழியே
அந்துகிலும் சீராவும் மணி அரையும் வாழியே
மை இலகு வேல் அணைத்த வண்மை மிகு வாழியே
மாறாமல் அஞ்சலி செய் மலர்க் கரங்கள் வாழியே
செய்யகலனுடன் அலங்கல் சேர் மார்பும் வாழியே
திண்புயமும் பணிலமன்ன திருக் கழுத்தும் வாழியே
மையல் செய்யும் முகமுறுவல் மலர்க் கண்கள் வாழியே
மன்னுமுடித்தொப்பாரம் வளையமுடன் வாழியே

கலந்த திருக்கார்த்திகையில் கார்த்திகை வந்தோன் வாழியே
காசினியில் ஒண் குறையலூர்க் காவலோன் வாழியே
நலந்திகழ் ஆயிரத்தெண்பத்து நால் உரைத்தான் வாழியே
நாலைந்தும் ஆறைந்தும் நமக்குரைத்தான் வாழியே
இலங்கெழு கூற்றிருக்கை இரு மடலீந்தான் வாழியே
இம்மூன்றில் இரு நூற்றிருபத்தேழீந்தான் வாழியே
வலந்திகழும் குமுதவல்லி மணவாளன் வாழியே
வாட்கலியன் பரகாலன் மங்கையர் கோன் வாழியே

## மதுரகவியாழ்வார்

சித்திரையில் சித்திரை நாள் சிறக்கவந்தோன் வாழியே
திருக்கோளூர் அவதரித்த செல்வனார் வாழியே
உத்தர கங்கா தீரத்துயர் தவத்தோன் வாழியே
ஒளி கதிரோன் தெற்குதிக்க உகந்து வந்தோன் வாழியே

பத்தியோடு பதினொன்றும் பாடினான் வாழியே
பராங்குசனே பரன் என்று பற்றினான் வாழியே
மத்திமமாம் பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி திருவடிகள் வாழி வாழி வாழியே

## ஆசாரியர்களின் வாழித்திருநாமங்கள்

### ஸ்ரீமந்நாதமுனிகள்

ஆனி தனில் அனுடத்தில் அவதரித்தான் வாழியே
ஆளவந்தார்க்குபதேசம் அருளிவைத்தான் வாழியே
பானுதெற்கிற் கண்டவன் சொல் பல உரைத்தான் வாழியே
பராங்குசனார் சொற் பிரபந்தம் பரிந்துகற்றான் வாழியே
கானமுறத் தாளத்திற் கண்டிசைத்தான் வாழியே
கருணையினால் உபதேசக் கதியளித்தான் வாழியே
நானிலத்திற் குருவரையை நாட்டினான் வாழியே
நலந்திகழு நாதமுனி நற்பதங்கள் வாழியே

### உய்யக்கொண்டார்

வாலவெய் ஓன்தனை வென்ற வடிவழகன் வாழியே
மால் மணக்கால் நம்பி தொழும் மலர்ப்பதத்தோன் வாழியே
சீலமிகு நாதமுனி சீர் உரைப்போன் வாழியே
சித்திரையில் கார்த்திகை நாள் சிறக்க வந்தோன் வாழியே
நால் இரண்டும் ஐயைந்தும் நமக்குரைத்தான் வாழியே
நால் எட்டின் உட்பொருளை நடத்தினான் வாழியே
மால் அரங்க மணவாளர் வளமுரைப்போன் வாழியே
வையம் உய்யக்கொண்டவர் தாள் வையகத்தில் வாழியே

## மணக்கால் நம்பி

தேசமுய்யக் கொண்டவர்தாள் சென்னிவைப்போன் வாழியே
தென்னரங்கர் சீரருளைச் சேர்ந்திருப்போன் வாழியே
தாசரதி திருநாமம் தழைக்க வந்தோன் வாழியே
தமிழ் நாதமுனியுகப்பைத் தாபித்தான் வாழியே
நேசமுடன் ஆரியனை நியமித்தான் வாழியே
நீணிலத்தில் பதின்மர்கலை நிறுத்தினான் வாழியே
மாசிமகந்தனில் விளங்க வந்துதித்தான் வாழியே
மால்மணக்கால் நம்பி பதம் வையகத்தில் வாழியே

## ஸ்ரீ ஆளவந்தார்

மச்சணியும் மதிள் அரங்கம் வாழ்வித்தான் வாழியே
மறை நான்கும் ஓர் உருவில் மகிழ்ந்துகற்றான் வாழியே
பச்சை இட்ட இராமர் பதம் பகருமவன் வாழியே
பாடியத்தோன் ஈடேறப் பார்வை செய்தோன் வாழியே
கச்சிநகர் மாயன் இரு கழல் பணிந்தோன் வாழியே
கடக உத்திராடத்துக் காலுதித்தான் வாழியே
அச்சமற மன மகிழ்ச்சி அணைந்திட்டான் வாழியே
ஆளவந்தார் தாள் இணைகள் அனவரதம் வாழியே

## பெரியநம்பி

அம்புவியில் பதின்மர்கலை ஆய்ந்துரைப்போன் வாழியே
ஆளவந்தார் தாள் இணையை அடைந்துய்ந்தோன் வாழியே
உம்பர் தொழும் அரங்கேசர்க்குகப்புடையோன் வாழியே
ஓங்கு தனுக் கேட்டை தனில் உதித்த பிரான் வாழியே
வம்பவிழ்தார் வரதர் உரை வாழி செய்தான் வாழியே
மாறனேரி நம்பிக்கு வாழ்வளித்தான் வாழியே

எம் பெருமானார் முனிவர்க்கிதமுரைத்தான் வாழியே
    எழில் பெரிய நம்பி சரண் இனிதூழி வாழியே

## திருக்கச்சி நம்பிகள்

மருவாரும் திருமல்லி வாழ வந்தோன் வாழியே
    மாசி மிருகசீரிடத்தில் வந்துதித்தான் வாழியே
அருளாளர் உடன் மொழி சொல் அதிசயித்தோன் வாழியே
    ஆறுமொழி பூதூரர்க் களித்த பிரான் வாழியே
திரு ஆலவட்டம் செய்து சேவிப்போன் வாழியே
    தேவராசாட்டகத்தைச் செப்புமவன் வாழியே
தெருளாரும் ஆளவந்தார் திருவடியோன் வாழியே
    திருக்கச்சி நம்பி இரு திருவடிகள் வாழியே

## எம்பெருமானார்

அத்திகிரி அருளாளர் அடி பணிந்தோன் வாழியே
    அருட்கச்சி நம்பியுரை ஆறு பெற்றோன் வாழியே
பத்தியுடன் பாடியத்தைப் பகர்ந்திட்டான் வாழியே
    பதின்மர்கலை உட்பொருளைப் பரிந்துகற்றான் வாழியே
சுத்த மகிழ் மாறன் அடி தொழுதுய்ந்தோன் வாழியே
    தொல் பெரிய நம்பி சரண் தோன்றினான் வாழியே
சித்திரையில் ஆதிரை நாள் சிறக்கவந்தோன் வாழியே
    சீர் பெரும்பூதூர் முனிவன் திருவடிகள் வாழியே

எண்டிசையெண் இளையாழ்வார் எதிராசன் வாழியே
    எழு பத்து நால்வர்க்கும் எண்ணான்குரைத்தான் வாழியே
பண்டைமறையைத் தெரிந்த பாடியத்தோன் வாழியே
    பரகாலன் அடியிணையைப் பரவுமவன் வாழியே

தண்டமிழ் நூல் நம்மாழ்வார் சரணானான் வாழியே
 தாரணியும் விண் உலகும் தானுடையோன் வாழியே
தெண்டிரை சூழ் பூதூர் எம் பெருமானார் வாழியே
 சித்திரையில் செய்ய திருவாதிரையோன் வாழியே

சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி
 திருவரையில் சாத்திய செந்துவராடை வாழி
ஏராரும் செய்யவடிவெப்பொழுதும் வாழி
 இலங்கிய முந்நூல் வாழி இணைத்தோள்கள் வாழி
சோராத துய்ய செய்ய முகச்சோதி வாழி
 தூமுறுவல் வாழி துணை மலர்க்கண்கள் வாழி
ஈராறு திருநாமம் அணிந்த வெழில் வாழி
 இனி திருப்போடெழில் ஞானமுத்திரை வாழியே

அறுசமயச் செடி அதனை அடி அறுத்தான் வாழியே
 அடர்ந்துவரும் குதிட்டிகளை அறத்துறந்தான் வாழியே
செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்துவிட்டான் வாழியே
 தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே
மறை அதனின் பொருள் அனைத்தும் வாய் மொழிந்தான் வாழியே
 மாறன் உரை செய்த தமிழ் மறை வளர்த்தோன் வாழியே
அறமிகு நற் பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
 அழகாரும் எதிராசர் அடி இணைகள் வாழியே

சங்கர பாற்கர யாதவ பாட்ட பிரபாகரர் தங்கள் மதம்
 சாய்வுற வாதியர் மாய்குவர் என்று சதுமறை வாழ்ந்திடுநாள்
வெங்கலி இங்கினி வீறு நமக்கிலை என்று மிகத்தளர்நாள்
 மேதினி நம் சுமை ஆறும் எனத் துயர்விட்டு விளங்கியநாள்

மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடுநாள்
    மன்னிய தென் அரங்கா புரி மாமலை மற்றும் உவந்திடுநாள்
செங்கயல்வாவிகள் சூழ் வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர்
    சீமான் இளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே

## எம்பார்

பூவளரும் திருமகளார் பொலிவுற்றோன் வாழியே
    பொய்கை முதல் பதின்மர் கலைப் பொருள் உரைப்போன் வாழியே
மாவளரும் பூதூரன் மலர்ப் பதத்தோன் வாழியே
    மகரத்தில் புனர் பூசம் வந்துதித்தான் வாழியே
தேவு மெப்பொருளும் படைக்கத் திருத்தினான் வாழியே
    திருமலை நம்பிக்கடிமை செய்யுமவன் வாழியே
பாவையர்கள் கலவி இருள் பகல் என்றான் வாழியே
    பட்டர் தொழும் எம்பார் பொற்பதம் இரண்டும் வாழியே

## ஸ்ரீ பராசரபட்டர்

தென் அரங்கர் மைந்தன் எனச் சிறக்கவந்தோன் வாழியே
    திரு நெடுந்தாண்டகப் பொருளைச் செப்புமவன் வாழியே
அன்னவயல் பூதூரன் அடி பணிந்தோன் வாழியே
    அநவரதம் எம்பாருக்காட்செய்வோன் வாழியே
மன்னு திருக்கூரனார் வள முரைப்போன் வாழியே
    வைகாசி அனுடத்தில் வந்துதித்தான் வாழியே
பன்னுகலை நால் வேதப் பயன் தெரிந்தோன் வாழியே
    பராசரனாம் சீர் பட்டர் பார் உலகில் வாழியே

## நஞ்சீயர்

தெண்டிரை சூழ் திருவரங்கம் செழிக்கவந்தோன் வாழியே
சீமாதவன் என்னும் செல்வனார் வாழியே
பண்டைமறைத் தமிழ்ப் பொருளைப் பகரவந்தோன் வாழியே
பங்குனியில் உத்திரநாள் பாருதித்தான் வாழியே
ஒண்டொடியாள் கலவிதனை ஒழித்திட்டான் வாழியே
ஒன்பதினாயிரப் பொருளை ஓதுமவன் வாழியே
எண்டிசையும் சீர் பட்டர் இணை அடியோன் வாழியே
எழில் பெருகும் நஞ்சீயர் இனிதூழி வாழியே

## நம்பிள்ளை

தேமருவும் செங்கமலத் திருத் தாள்கள் வாழியே
திருவரையில் பட்டாடை சேர்மருங்கும் வாழியே
தாமமணி வட மார்வும் புரி நூலும் வாழியே
தாமரைக்கை இணை அழகும் தடம்புயமும் வாழியே
பாமருவுந் தமிழ் வேதம் பயில் பவளம் வாழியே
பாடியத்தின் பொருள் தன்னைப் பகர்நாவும் வாழியே
நாமநுதல் மதிமுகமும் திருமுடியும் வாழியே
நம் பிள்ளை வடிவழகும் நாடோறும் வாழியே

காதலுடன் நஞ்சீயர் கழல் தொழுவோன் வாழியே
கார்த்திகைக் கார்த்திகை உதித்த கலிகன்றி வாழியே
போதமுடன் ஆழ்வார் சொற்பொருள் உரைப்போன் வாழியே
பூதூரான் பாடியத்தைப் புகழுமவன் வாழியே
மாதகவால் எவ்வுயிர்க்கும் வாழ்வளித்தான் வாழியே
மதிள் அரங்கர் ஓலக்கம் வளர்த்திட்டான் வாழியே

நாதமுனி ஆளவந்தார் நலம் புகழ்வோன் வாழியே
நம் பிள்ளை திருவடிகள் நாடோறும் வாழியே

## வடக்குத் திருவீதிப்பிள்ளை

ஆனி தனில் சோதி நாள் அவதரித்தான் வாழியே
ஆழ்வார்கள் கலைப் பொருளை ஆய்ந்துரைப்போன் வாழியே
தான் உகந்த நம் பிள்ளை தாள் தொழுவோன் வாழியே
சடகோபன் தமிழ்க்கீடு சாற்றினான் வாழியே
நானிலத்தில் பாடியத்தை நடத்தினான் வாழியே
நல்ல உலகாரியனை நமக்களித்தான் வாழியே
ஈனமற எமை ஆளும் இறைவனார் வாழியே
எங்கள் வடவீதிப்பிள்ளை இணை அடிகள் வாழியே

## பிள்ளைலோகாசார்யர்

அத்திகிரி அருளாளர் அனுமதியோன் வாழியே
ஐப்பசியில் திருவோணத்தவதரித்தான் வாழியே
முத்தி நெறி மறைத் தமிழால் மொழிந்தருள்வோன் வாழியே
மூதரிய மணவாளன் முன்புதித்தான் வாழியே
நித்தியம் நம் பிள்ளை பதம் நெஞ்சில் வைப்போன் வாழியே
நீள் வசன பூடணத்தால் நியமித்தான் வாழியே
உத்தமமாம் முடும்பை நகர் உதித்தவள்ளல் வாழியே
உலகாரியன் பதங்கள் ஊழிதொறும் வாழியே

## கூரகுலோத்தமதாசர்

சந்ததமும் ஆழ்வார்கள் தமிழ் வளர்த்தோன் வாழியே
தாரணியில் சிறுநல்லூர் தான் உடையோன் வாழியே

எந்தை உலகாரியனை இறைஞ்சுமவன் வாழியே
இலகு துலா ஆதிரையில் இங்குதித்தான் வாழியே
இந்த உலகத்தோர்க்கிதமுரைத்தோன் வாழியே
எழில் வசந பூடணத்துக்கினிமை செய்தான் வாழியே
குந்திநகர்ச் சிந்தை கொண்ட செல்வனார் வாழியே
கூர குலோத்தம தாசர் குரை கழல்கள் வாழியே

## திருவாய்மொழிப்பிள்ளை

வையகமெண் சடகோபன் மறைவளர்த்தோன் வாழியே
வைகாசி விசாகத்தில் வந்துதித்தான் வாழியே
ஐயன் அருள்மாரி கலை ஆய்ந்துரைப்போன் வாழியே
அழகாரும் எதிராசர் அடி பணிவோன் வாழியே
துய்ய உலகாரியன் தன் துணைப் பதத்தோன் வாழியே
தொல் குருகாபுரி அதனைத் துலக்கினான் வாழியே
தெய்வ நகர் குந்திதன்னில் சிறக்கவந்தோன் வாழியே
திருவாய்மொழிப் பிள்ளை திருவடிகள் வாழியே

## மணவாளமாமுனிகள்

இப்புவியில் அரங்கேசர்க்கீடளித்தான் வாழியே
எழில் திருவாய்மொழிப் பிள்ளை இணை அடியோன் வாழியே
ஐப்பசியில் திருமூலத்தவதரித்தான் வாழியே
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்றும் வாழியே
எப்புவியும் ஸ்ரீசைலம் ஏத்தவந்தோன் வாழியே
ஏராரும் எதிராசர் என உதித்தான் வாழியே
முப்புரிநூல் மணிவடமும் முக்கோல் தரித்தான் வாழியே
மூதரிய மணவாள மாமுனிவன் வாழியே

## பதினான்கு சீர்க்கழி நெடிலாசிரியச் சந்தவிருத்தம்

செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்
சீர் உலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடுநாள்
மந்த மதிப் புவி மானிடர் தங்களை வானில் உயர்த்திடுநாள்
மாசறு ஞானியர் சேர் எதிராசர் தம் வாழ்வு முளைத்திடுநாள்
கந்த மலர்ப் பொழில் சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடுநாள்
காரமர் மேனி அரங்க நகர்க் கிறை கண்கள் களித்திடுநாள்
அந்தமில் சீர் மணவாள முனிப்பரன் அவதாரம் செய்திடுநாள்
அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலம் அதெனு நாளே

**ஆழ்வார் ஆசாரியர்களின் வாழித்திருநாமங்கள் முற்றிற்று**

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்